சென்றடைகிறது. இந்தச் சாலை சீரமைக்கப்பட்டால் இராமேஸ்வரத்திற்கு மேலும் மிகச் சிறந்த புறவழிச் சாலையாக மாற்றி அமைக்கப்பட்டு, இராமநாதபுரம் நகருக்குள் போக்குவரத்து அடர்வுகள் குறையும். 12 கிலோ மீட்டர் குறைந்த பயணத்தில் வட மாவட்டங்கள், வட மாநிலங்களிலிருந்து வருகின்ற வாகனங்கள் இராமேஸ்வரம் செல்ல ஏதுவாக இருக்கும். எனவே, தமிழக அரசு செலவு இல்லாமல் ஒரு துளி மையை செலவழித்து ODR என்று இருப்பதை MDR ஆக தரம் உயர்த்த வேண்டும். மத்திய அரசாங்கம் C.R.F.-ல் எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட இதர சாலையை (ODR) இருப்பதை மாவட்ட முக்கிய சாலையாக அதாவது, MDR-ஆகத் தரம் உயர்த்தித் தர முன்வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட இதர சாலையை, மாவட்ட முக்கிய சாலையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டார்கள். வாகனங்களினுடைய எண்ணிக்கையைக் கணக்கிட்டுத்தான் எந்த வகைச் சாலை என்பது நிர்ணயிக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அங்கே அதிக வாகனங்கள் சென்றால் அதை MDR-ஆகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

48—

அங்கன்வாடி மையம்

***42078—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 பிப்ரவரி 23]

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கருங்கண்ணன் குடியிருப்பில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கருங்கண்ணன் குடியிருப்பு பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள வேப்பங்குளம் அங்கன்வாடி மையத்தின்மூலம் பயனடைந்து வருவதால் அங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கருங்கண்ணன் குடியிருப்பில் உள்ள அங்கன்வாடியில் 10 குழந்தைகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வேப்பங்குளம் கிராமத்திலிருந்து மாதந்தோறும் சத்துணவு வழங்கப்படுகிறது. கருங்கண்ணன் குடியிருப்பில் மினி அங்கன்வாடி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். மற்றும், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 11 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட பரிந்துரை செய்திருப்பதாக நல்ல பதிலைச் சொன்ன மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அங்கன்வாடி மையம் திறப்பதற்கு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதியாக இருப்பின், குறைந்தபட்ச மக்கள்தொகை 400 ஆகவும், அதிகபட்ச மக்கள்தொகை 800 ஆகவும் இருத்தல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருங்கண்ணன் குடியிருப்பிலுள்ள மக்கள் தொகை 265 ஆகும். மக்கள்தொகை குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க இயலவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறு அங்கன்வாடி மையம் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி நடக்கக்கூடிய இந்த அங்கன்வாடி மையங்களில், தற்போது குறு அங்கன்வாடி மையம் அமைக்கக்கூடாது என்று மத்திய அரசு நாக்கீது அனுப்பியிருக்கிறது. ஆகவே, அருகிலே இருக்கக்கூடிய அங்கன்வாடி மையத்தோடு கருங்கண்ணன் குடியிருப்பில் இருக்கக்கூடிய குழந்தைகளை இணைத்து ஒன்று சேர்ப்பதற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கிற இந்த அரசு நிச்சயமாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

49—

கல்வியியல் கல்லூரி

***29279—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் புதிய கல்வியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,